සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| | | |
|---|---|---|
| මගේ අංකය / **எனது இல** / **My No** DSD/HO/08/PM/04/E.Power-2025 | ඔබේ අංකය / **உமது இல** / **Your No** ................ | දිනය / **திகதி** / **Date** 2025.03.07 |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் :- 2025/01 இற்கான முதலாவது பிற்சேர்க்கை.**

சகல மாவட்ட செயலாளர்கள் /மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்,
மாவட்ட பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்,
மாவட்ட சமுதாய அடிப்படை வங்கி/வங்கிச் சங்க முகாமையாளர்கள்.

**சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்-2025**
**சமுர்த்தி நிவாரண உதவி நன்மைகளைப் பெற்ற குறைந்த வருமானம் பெறும் (தற்போது அஸ்வெசும சமூக நன்மைகள் கிடைக்கப் பெறாது) குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு இனங் காணுதல்.**

சமூக வலுவூட்டல் வேலைத்திட்டத்திளை 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எனது சம இலக்கமும் 2025.02.11 ஆம் திகதியிடப்பட்ட சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01இன் மூலம் ஏற்கனவே தங்களுக்கு ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளது.

02. அச்சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் அஸ்வெசும சமூக நன்மைகளை பெறும் பயனாளிகளுக்குறிய பெயர் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையுடன் கலந்துரையாடி பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி நிவாரணத்தினை பெற்ற குறைந்த வருமானம் பெறும் (தற்போது அஸ்வெசும சமூக நன்மைகளை பெறாத) குடும்பங்களில் இருந்து வலுவூட்டும் பொருட்டும் பொருத்தமான குடும்பங்களை இனம் காண்பதனை துரிதப்படுத்தி உரிய பயனாளிகளை வலுவூட்டும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எண்ணியுள்ளது.

04. ஆகையினால் சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01இன் பந்தி இலக்கம் 04 இன் மூலம் பயனாளிகளை தெரிவு செய்து கொள்வதற்கு அறிமுகப்படுத்தியுள்ள அளவுகோல்கள் திருத்தம் செய்யப்படுவதுடன் இத்துடனுள்ள இணைப்பு -01 இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய அளவுகோல்களை பயன்படுத்தி அஸ்வெசும கிடைக்கப் பெறாத சமுர்த்தி நிவாரணம் கிடைக்கப்பெற்ற குடும்பங்களில் இருந்து பொருத்தமான குடும்பங்களை இனம் காணுதல் மற்றும் அதற்குரிய அறிக்கைகளை தயாரிக்குமாறு அறியத் தருகின்றேன்.

05. இந்த அளவுகோல்களை பயன்படுத்தி பொருத்தமான குடும்பங்களை இனம் காண்பது கிராமியக்குழுவின் இணக்கப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06. இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குமாறு அறியத் தருகின்றேன்.
07. திட்டமிடப்பட்டுள்ள பிரகாரம் குடும்பங்களை வலுவூட்டும் வேலை திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு தங்களது ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

சீ.டீ. களுஆரச்சி,
பணிப்பாளர் தலைமையதிபதி.

பிரதிகள்:-

1. செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
3. கணக்காய்வாளர் தலைமையதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம் - த.கூ.க. பொருட்டு
4. மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந.பொருட்டு
5. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
6. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
7. சகல பிரிவுத் தலைவர்கள், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - உ.ந. பொருட்டு


**1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director (Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

**<u>சமுர்த்தி நிவாரண உதவி நன்மைகளைப் பெற்றுக் கொண்ட குறைந்த வருமானம் பெறும் (தற்போது அஸ்வெசும சமூக நலன்புரி கிடைக்கப் பெறாத) குடும்பங்களை வலுவூட்டம் பொருட்டு இனம் காணுதல்</u>.**

**01. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் பொருத்தமான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு இனம் காணுதல்.**

i. தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் மிகப் பொருத்தமான 12 குடும்பங்களை ஆரம்ப கட்டத்தில் தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

ii. இத்தொகுதியின் கீழ் குடும்பங்களை தெரிவு செய்யும்போது கீழுள்ள சகல அளவுகோல்களையும் பூர்த்தி செய்கின்ற குடும்பங்களை மாத்திரம் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

1. வீட்டின் பிரதான குடியிருப்பாளர் வாழ்க்கைத் துணை, திருமணமாகாத பிள்ளைகள் ஆகிய நபர்களில் இருந்து செயற்பாடுள்ள ஒருவராவது 18-60 இற்குமிடைப்பட்ட வயதையுடையவர் ஒருவராக இருக்க வேண்டியதுடன் மேலும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையானது 02 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையினையுடைய குடும்பம் ஒன்றாக இருத்தல் வேண்டும்.
2. 2023 ஆம் ஆண்டின் ஜூன் மாத சமுர்த்தி நிவாரண உதவி பெற்றிருந்த பெயர் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள குடும்பம் ஒன்றாக இருத்தல்.
3. கவனத்தில் கொள்ளப்படும் திகதியில் சமுர்த்தி வங்கி மூலம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கடன் தொகையினை பெற்றுக்கொண்ட ஒருவராக இருத்தலாகாது.
4. 2025 ஆம் ஆண்டில் கிட்டிய மூன்று வருடங்களுக்குள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி நிதி உதவி வசதி ஒன்றினை பெறாத குடும்பம் ஒன்றாக இருத்தல்.
5. பொருளாதாரத் துறையின் கீழ் வலுவூட்டலின் பொருட்டு கீழே ஒரு பணிக்கு முன்வைக்கப்பட்டுள்ள அல்லது முன்வைக்கக்கூடிய குடும்பம் ஒன்றாக இருத்தல்.
   i. ஏற்கனவே பயனுள்ள வருமானமீட்டல் கருத்திட்டமொன்றினை மேற்கொள்கின்ற ஒருவராக/குடும்பம் ஒன்றாக இருத்தல்.
   ii. புதிதாக வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றில் ஈடுபடுத்தக் கூடிய குடும்பம் ஒன்றாக இருத்தல்
   iii. தொழில்சார் பயிற்சி ஒன்றின் பின்னர் சுயதொழில் ஒன்றில் அல்லது உள்ளூர் / வெளிநாட்டு தொழில் ஒன்றில் ஈடுபடுத்தக்கூடிய வயது 18-24 இற்குமிடைப்பட்ட இளைஞர்/யுவதி ஒருவர் இருத்தல்.
6. சமுர்த்தி வங்கியின் அங்கத்துவமுள்ள மற்றும் சமுர்த்தி வங்கிக் கடனை செலுத்தாமல் உள்ள குடும்பம் ஒன்றாக இருத்தலாகாது.
7. வலுவூட்டல் வேலைத் திட்டத்தில் இணைவதற்கு விருப்பமுள்ள குடும்பம் ஒன்றாக இருத்தல்.

**02. தகவல்களை சேகரிப்பதும் குழு இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதும்.**

i. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரால் மேலே பந்தி இலக்கம் 01இன் பிரகாரம் தகுதிகளை பூர்த்தி செய்யும் 12 குடும்பங்களை முதலில் இனங்கண்டு இணைப்பு 01(A) படிவத்தின் பிரகாரம் தகவல்களை சேகரித்து கிராமிய குழுவிற்கு சமர்ப்பித்து குழுவின் அதிகப்படியான இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ii. அதன்பின்னர் குழு இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் பொருட்டு இத்துடன் உள்ள இணைப்பு - 01(B) படிவத்தினை பயன்படுத்தி அந்த ஒவ்வொரு குடும்பத்தின் பொருட்டும் தேவையான தகவல்களை சேகரித்தல் வேண்டும்.

iii. இப்படிவத்தினை சமுர்த்தி வங்கியால் செலவுகளை மேற்கொண்டு நிழற் பிரதி செய்து உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

iv. அதன் பின்னர் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்ற குடும்பங்கள் தொடர்பான தகவல்களை இணைப்பு - 01(C) இன் பிரகாரம் பூர்த்தி செய்து சமுர்த்தி வங்கி முகாமையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

v. கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் குடும்பங்களை இனங்காண்பது மற்றும் வங்கிக்கு தகவல்களை வழங்குவது 2025.03.17 ஆம் திதிக்கு முன்னர் முடிக்கப்படல் வேண்டும்.

**03. தகவல்களை வழங்கும் பொருட்டு பயன்படுத்த வேண்டிய படிவங்களும் திகதிகளும்.**

| தகவல்களை வழங்ககப்படும் பிரிவு / இடம் | தகவல்களை சமர்ப்பிக்க வேண்டிய இடம் | தகவல்களை அறிக்கையிட வேண்டிய இறுதி திகதி | பயன்படுத்த வேண்டிய படிவம் |
|---|---|---|---|
| பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் | சமுர்த்தி வங்கி முகாமையாளர் | **2025.03.17** | இணைப்பு-01(C) |
| சமுர்த்தி வங்கி | சமுர்த்தி வங்கிச் சங்கம் | **2025.03.24** | இணைப்பு-01(D) |
| சமுர்த்தி வங்கிச் சங்கம் | மாவட்ட சமுர்த்திப் பிரிவு | **2025.03.28** | இணைப்பு-01(E) |
| மாவட்ட சமுர்த்தி பிரிவு | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள திட்டமிடல் பிரிவு<br>(E.mail-dirpm123@gmail.com) | **2025.04.04** | இணைப்பு-01(E) |

Translated By;- M.M.M Jawhar (Translator)